ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2433/15 - 2025 අප්‍රේල් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.04.24
2433/15ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### கைத்தொழில் பிணக்குகள் சட்டம் (131 ஆம் அத்தியாயம்)

இலங்கைச் சட்டவாக்கச் சட்டங்களின் (திருத்திய பதிப்பு 1956) 131 ஆம் அத்தியாயமானதும், 1957 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மற்றும் 62 ஆம் இலக்க மற்றும் 1962 ஆம் ஆண்டின் 04 இலக்க, கைத்தொழில் பிணக்குகள் (திருத்தச்) சட்டங்களினால் திருத்தப்பட்டதுமான (1968 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய) 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகிய நான்.

(1) கைத்தொழில் நீதிமன்றமொன்றினை அமைப்பதற்காக தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர்கள் உள்ளடங்கிய குழுவின் உறுப்பினர்களாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை இத்தால் நியமிக்கின்றேன்.

(2) அவ்வுறுப்பினர்களின் பதவிக்காலம் 2025.04.02 ஆம் திகதியிலிருந்து மூன்று (03) ஆண்டு காலப்பகுதியாக இருக்கவும் இத்தால் குறித்துரைக்கின்றேன்.

**அநுர குமார திசாநாயக்க,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2025, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஏ.ஏ.வீரசூரி | உதவித் தொழில் ஆணையாளர் (ஓய்வுபெற்ற) |
| 2. | திரு. ஆர்.ஏ.திலக்கரத்ன | சட்டத்தரணி |
| 3. | திரு. டபிள்யூ.ஏ.ஜயவிக்கிரம | சட்டத்தரணி |
| 4. | திரு. இராமசாமி நவோதயம் | சட்டத்தரணி |
| 5. | திரு. சிரி சிங்கப்புலி | சட்டமாணி |
| 6. | கலாநிதி ஏ.எச்.கமகே | சட்டத்தரணி |
| 7. | கலாநிதி கே.ஏ.திலக்கரத்ன | இலங்கை நிர்வாகச் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் (ஓய்வுபெற்ற) |
| 8. | திரு. வசந்த விக்கிரமரத்ன புஞ்சிஹேவா | பிரதி தொழில் ஆணையாளர் (ஓய்வுபெற்ற) |
| 9. | திரு. சீ.ஏ.எச்.எம்.விஜேரத்ன | சட்டத்தரணி |

EOG 04 - 0167

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.